**சிறப்பு மாவட்ட நீதிமன்றம், கிருஷ்ணகிரி**
**(மோட்டார் வாகன விபத்து வழக்குகள்)**
**வழக்கு எண். 1296/2023**

2026–ம் ஆண்டு ஜூலை மாதம் 3–ம் தேதி ம.சா.2 வாக்குமூலம் உறுதிமொழிச் சட்டம் 44/1969 பிரிவு 4 ஏற்பாட்டின் படி **எழுத்தர் நிலை–1, திரு.செந்தில்குமார்**, சிறப்பு மாவட்ட நீதிமன்றம், கிருஷ்ணகிரி என்பவரால் பிரமாணம் செய்யப்பட்டார்.

| | |
|---|---|
| **பெயர்:– தங்கராஜ்** | **கிராமம்:** |
| **க/பெ.:** | **மாவட்டம்:** |
| **வயது:** | **தொழில்:** |

**ம.சா.2 ஆஜராகி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட அனுமதிக்கப்படுகிறார்.** (சாட்சி கைவசம் வைத்திருந்த அசல் ஆதார் அட்டை மூலம் அவருடைய அடையாளம் சரிபார்க்கப்பட்டது.)

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

இன்று சாட்சியம் அளிக்க நீதிமன்றதிலிருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். மனுதாரர்கள் அழைத்ததின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். விபத்தில் இறந்து போன நபர் என் மாமா. விபத்தை நான் நேரடியாக பார்த்தேன். லாரி முன்னால் போய்கொண்டிருந்தது என்றும் அதற்கு பின்னால் என் மாமா இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்றார் என்றும் சொன்னால் சரிதான். அவர் லாரியின் பின்புற வலதுபக்கத்தில் மோதினார் என்றால் சரியல்ல. லாரியின் முன்வலது பக்கம் தான் அவருடைய இருசக்கர வானத்தின் மீது மோதியது. இந்த விபத்து பற்றி போலிஸ் புகார் கொடுத்தேன். லாரி மெதுவாகத்தான் போய் கொண்டிருந்தது என்றும், என் மாமா தான் அதிவேகமாகவும்,

கவனகுறைவாகவும் வண்டியை ஓட்டி சென்று லாரியின் பின் வலது புறத்தில் மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்றும் சொன்னால் சரியல்ல. விபத்து தொடர்பான முதல் தகவல் அறிக்கை லாரியின் ஒட்டுனர் மீது தான் பதிவு செய்யப்பட்டது. இறுதி அறிக்கை யார் மீது பதிவு செய்யப்பட்டது என்று தெரியாது. என் மாமாவின் கவனகுறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்று புலன் விசாரணையில் கண்டறியப்பட்டு இறுதி அறிக்கை அவ்வாறே தாக்கல் செய்யப்பட்டது என்றால் தெரியாது. இந்த விபத்து என் மாமாவின் கவனகுறைவால் தான் ஏற்பட்டது என்றும் நெருங்கிய உறவினர்கள் என்பதால் விபத்து நடந்த முறைப்பற்றி உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>:–** இல்லை

K R LEELA Digitally signed by K R LEELA